(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2023

| அரசியல் விஞ்ஞானம்<br>Political Science | Three Hours<br>Gr -12 (2024) | 23 | T | I, II |
|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- ❖ இவ் வினாத்தாள் பகுதி I, பகுதி II என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ❖ பகுதி I ஆனது பிரிவு A, பிரிவு B என்னும் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- ❖ பிரிவு A யில் 20 பல்தேர்வு வினாக்களும், பிரிவு B யில் 10 குறுவிடை வினாக்களும் காணப்படும். இவை எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் தலா 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள் வழங்கப்படும்.
- ❖ பகுதி II இல் நான்கு வினாக்கள் காணப்படும் இவற்றுள் விரும்பிய இரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவிற்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள் வழங்கப்படும்.

**பகுதி I** சுட்டெண் :................

**பிரிவு A**

❖ ***01 தொடக்கம் 08 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

01) அரசியல் என்பது
(1) அரசியலின் கோட்பாட்டுப் பகுதியை குறிக்க பயன்படும்.
(2) தொழில் சார் அரசியல் வாதிகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடாகும்.
(3) பண்டைய கிரேக்க காலத்தில் ஆரம்பமாகிய செயல் முறையாகும்.
(4) அரசிற்கும் மக்களுக்கும் இடையில் நிலவும் ஒரு தொடர்புத்துறையாகும்.
(5) பிரஜைகளின் ஆண்மீகச் செயற்பாட்டை செப்பனிடுவதாகும். (.........)

02) அரசியலைக் கற்றல் என்பது
(1) அதிகார அரசியலை கற்பதுடன் வரையறுக்கப்பட்டதாகும்.
(2) விஞ்ஞான ரீதியிலான ஆய்வியலுடன் மட்டும் இனம் காணப்படுகிறது.
(3) புராதன கிரேக்க காலத்தில் முறையாக கற்க ஆரம்பிக்கப்பட்டது.
(4) பௌதீக விஞ்ஞானங்களின் நிலைக்கு வளற்சியடைந்துள்ளது.
(5) நெறிமுறை சார் விசாரனைகளை புறந்தள்ளியுள்ளது. (.........)

03) அரசு என்பது
(1) தேசம், சமூகம், அரசாங்கம் என்பவற்றுக்கு ஈடானது.
(2) ஒழுங்கமைந்த அரசாங்கம் ஒன்றினூடாக தனது அதிகாரத்தை பிரயோகிக்கிறது.
(3) வரையறுக்கப்பட்ட ஆள்புலத்திற்கு வெளியில் உள்ள சமூக நிறுவனங்களை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை கொண்டுள்ளது.
(4) வெளிவாரியான தேசங்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுள்ளது.
(5) அரசாங்கத்தின் அரசியல் கரமாகும். (.........)

04) அரசியல் விஞ்ஞான பாட ஆய்வுகளுக்கு பயன்படும் அணுகு முறையுடன் சரியாக பொருந்தும் கூற்று.
(1) தத்துவார்த்த அணுகுமுறை – அரிஸ்ரோட்டில், பிளேட்டோ ஆகியோர் முதல் முதலாக இதனை தமது ஆய்வுகளுக்கு பயன்படுத்தினர்.
(2) ஒப்பீட்டு அணுகுமுறை – பல்வேறு சமூக கலாச்சார மாதிரிகளை ஒப்பிடுகிறது.
(3) நடத்தைவாத அணுகுமுறை – அரசியலை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்வதை நிராகரிக்கிறது.
(4) பெண்ணியல் வாத அணுகுமுறை – பால் நிலை சமத்துவத்தை நிராகரிக்கிறது.
(5) பன்மைத்துவ அணுகுமுறை – மாக்சிச வாதிகளால் பயன்படுத்தப்பட்ட அணுகுமுறையாகும். (.........)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

05) அரசாங்கம் என்பது.
(1) அரசின் ஆக்கக் கூறுகளில் ஒன்று ஆகும்.
(2) நிலையான, மற்றும் கால மாற்றத்திற்கு அப்பாற்பட்டதாகும்.
(3) அரசிற்கு மாற்றீடான ஒரு சொற்பதமாகும்.
(4) மக்களின் ஏகப் பிரநிதியாக ஜனநாயக நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
(5) அரசிற்கு ஆணை பிறப்பிக்கும் அதிகார ஸ்தாபனமாக கொள்ளப்படுகிறது.
(………)

06) இறைமை என்பது.
(1) ஏனைய சமூக நிறுவனங்களை விட அரசினை உயர்வான அதிகார நிறுவனமாக மாற்றுகிறது.
(2) அரசாங்கத்தின் மீயுயர் அதிகாரமாகும்.
(3) அரசின் ஆள்புல எல்லைக்கு வெளியில் உள்ள சமூகம் மற்றும் நிறுவனங்களை கட்டுப்படுத்தும் அதிகாரமாகும்.
(4) தேவை ஏற்படும் போது இலகுவில் பிரிக்கப்படக் கூடியது.
(5) உலகமயமாக்கம் அதன் கோட்பாட்டு தளத்தில் எவ்வித மற்றத்தையும் ஏற்படுத்தவில்லை
(………)

07) சிவில் சமூகம் என்பது
(1) நிச்சயமான ஒரு அரசியல் சார்பு அமைப்புக்கள் மட்டுமாகும்.
(2) லிபறல் ஜனநாயகத்தின் செயற்பாடுகளுக்கு அவசியமற்றது.
(3) அரசின் பொதுக் கொள்கை உருவாக்க செயல்முறைக்கான தகவல்களை வழங்குகிறது.
(4) பிரஜைகளின் தேர்தல் பங்கேற்பிற்கு வழிவகுக்கின்றது.
(5) அனைத்தாண்மை நாடுகளில் செயற்படும் பூரண சுயாதீன அமைப்புக்களாகும். (………)

08) அரசியல் கட்சிகள் என்பது.
(1) சிக்கலான பொதுஜன அபிப்பிராயத்தை ஒழுங்குபடுத்துகின்றன.
(2) மக்கள் மத்தியில் அரசியல் வன்செயலை அதிகரிக்க செய்கின்றன.
(3) அரசியல் சமூக பொருளாதார பிரச்சினைகளில் மக்களை தவறாக வழி நடத்துகின்றன.
(4) 18ம் நூற்றாண்டில் அமெரிக்க நாடுகளில் முதலில் ஆரம்பமாகியது.
(5) சமவுடமை நாடுகளின் போட்டித் தன்மையுடன் செயற்படுகின்றன. (………)

- **09 தொடக்கம் 15 வரையான வினாக்களில் சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

09) தற்கால உலகில் அரசொன்றின் பணிகளாக கொள்ளப்படுவது.
A. சமூக சொத்துக்களின் பாதுகாவலனாக செயற்படுதல்.
B. பொருளாதார முகாமைத்துவம் மற்றும் வழிநடாத்துதல்.
C. பிரஜைகளின் சமுக செயற்பாடுகளை கட்டுப்படுத்துதல்
D. சமூகத்தின் சட்டம் ஒழுங்கினைப் பேணுதல்.
E. யுத்தப் பிரகடனமும் யுத்த நடவடிக்கையும்
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (………)

10) தாராண்மை ஜனநாயக அரசுக்கு பெறுமதியான சேர்மானக் கூற்றுக்களை அடையாளம் காண்க.
A. யாப்பினுள் அமைந்த அரசாங்கம்.
B. சுதந்திரமான வியாபாரவர்த்தகமும் கைத்தொழிலும்
C. பலகட்சிப் போட்டி அரசியல்
D. அரசகட்டுப்பாட்டிற்குட்பட்ட ஊடகம்.
E. அமுக்க குழுக்கள் மற்றும் சிவில் சமூகத்தின் சுயாதீனம்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) ABDE (………)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

11) சமவுடமை அரசுக்குப் பொருத்தமான சேர்மானக் கூற்றுக்களை அடையாளம் காண்க.

A. அரச தலையீடற்ற பொருளாதார செயற்பாடுகள்.

B. தனிப்பட்டவரின் நன்மைக்கு மேல் கூட்டு நன்மையை பேணுதல்.

C. உற்பத்திக் கருவிகளை பொதுவாக வைத்திருத்தல்.

D. பொருளாதாரத்தில் அரச ஆதிக்கம்.

E. தனிப்பட்டவரின் கைகளில் பொருளாதார ஆதிக்கத்தை குவிக்காதிருத்தல்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (………)

12) பாசிச அரசுக்கு பொருத்தமான சேர்மானக் கூற்றுக்களை அடையாளம் காண்க.

A. மனித உரிமைகளை அங்கீகரித்தலும் பாதுகாத்தலும்.

B. தலைவர்களுக்கு மேன்மையான இடம் வழங்குதல்.

C. சமூகத்தினை இராணுவ மயமாக்குதல்.

D. அரசு "உலக ஆன்மாவின்" உருவாக்கம் என்பதை வலியுறுத்துதல்.

E. அரசு சர்வல்லமை பொருந்தியது என்பதை வலிமைபடுத்துகின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (………)

13) சமூக ஒப்பந்த வாதம் தொடர்பான பொருத்தமான சேர்மானக் கூற்றுக்களை அடையாளப்படுத்துக.

A. தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் வீழ்ச்சி இதன் எழுச்சிக்கு காரணமாகியது.

B. ஆட்சியாளன் தெய்வத்தின் பிரதிநிதி என்பதை வெகுவாக வலியுறுத்துகிறது.

C. அரசு சமூகத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவு என்பதை ஏற்கிறது.

D. இக் கருத்தியலின் கோட்பாட்டுத்தளத்திற்கு கொப்ஸ், லொக், ரூசோ அடித்தளமிட்டனர்.

E. ஐரோப்பாவில் மத்திய கால இறுதிப் பகுதியில் அரசின் அதிகாரத்தை நியாயப்படுத்த மேலேழுந்த கோட்பாடாகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (………)

14) ஒப்பீட்டு அரசியலுக்கு பொருத்தமான சேர்மானக் கூற்றுக்களை அடையாளப்படுத்துக.

A. 20ம்நூற்றாண்டின்பின்னரைப் பகுதியில் அரசறிவியலில் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

B. புராதன கிரேக்க அறிஞராகிய அரிஸ்ரோட்டில் இதன் ஆரம்ப கர்த்தாவாக இனங்காணப்படுகிறார்.

C. பிற்காலத்தில் "ஒப்பீட்டு அரசியல்" என்னும் புதிய கற்கை துறைக்கு அடித்தளமிட்டது.

D. பல்வேறு நாடுகளின் சமூக, கலாச்சார மாதிரிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்ய பெரிதும் பயனாகியது.

E. வெவ்வேறு நாடுகளின் அரசியல் முறை தொடர்பான புரிந்துணர்வினை பலப்படுத்தியது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (………)

15) அரசியலை செய்தல் என்பதுடன் தொடர்பான சரியான சேர்மானக் கூற்றுக்களை இனங்காண்க.

A. அரசாங்க அதிகாரத்தை பெற்றுக் கொள்ள செயற்படல்.

B. தேர்தல் செயல்முறை தொடர்பான நடைமுறைகளை ஆய்வு செய்தல்.

C. அரசாங்க அதிகாரத்தை தக்கவைத்தலும் நடைமுறைப்படுத்தலும்

D. அரசியல் கட்சி செயற்பாடுகளில் பங்கேற்றல்.

E. அரசியல் போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு இயக்கங்களில் பங்குபற்றுதல்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (………)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ ***16 தொடக்கம் 20 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் கூற்றுக்களுக்கு பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் எழுதுக.***

| **இலக்கம்** | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| 16. | கிரேக்க நகர அரச முறையில் பிரஜைகள் மட்டும் அரசியல் உரிமையை அனுபவித்தனர். | கிரேக்க நகர அரசினுள் பெண்கள், அடிமைகள், குடியேற்ற வாசிகளுக்கு அரசியல் உரிமை கிடைக்கிவில்லை. பிரஜை என்பது சொத்துடைய ஆண்களைக் குறிக்கும். ( ) |
| 17. | பரம்பரை பரம்பரையாக அரசாட்சிக்கு உரிமை கோரும் தனி நபரினால் மேற்கொள்ளப்படும் ஆட்சி முறை அரசாட்சியாகும். | செல்வம் மற்றும் மதவிடயங்களுக்காக ஏனைய குலங்களுடன் போராடி தமது குழுவுக்கு அனுகூலங்களை பெற்றுக் கொடுப்பது கோத்திர அரச தலைவரின் கடமையாகும். ( ) |
| 18. | இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசறிவியலாளர்களால் நடத்தைவாத அணுகுமுறை முன்வைக்கப்படதாகும். | கிரேக்கம், உரோம், மத்திய காலப்பகுதியில் சோக்கிரட்டிஸ், பிளேட்டோ போன்ற அறிஞர்களால் பழமை ஒப்பீட்டு அணுகுமுறை அரசியல் ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டது. ( ) |
| 19. | அரசிற்கு வெளியில் சுயாதீனமான பிரஜைகள் தமது பொது நோக்கங்களுக்காக ஒன்றுபட்டு உருவாக்கிய சமூக அமைப்புக்கள் சிவில் சமூகமாகும். | சிவில் சமூகமானது அனைத்தாண்மை சமூகங்களில் சுயாதீனமான செயற்பாட்டை கொண்டுள்ளன. ( ) |
| 20. | பிரஜை ஒருவர் அரசொன்றின் உறுப்பினர் என்ற அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்வதில் ஆட்புலம் பங்களிப்பதில்லை. | அரசின் ஆள்புலத்தில் வாழும் அனைத்து மக்களும் ஒரே அடையாளம் கொண்ட ஒரு இனமாக கருதப்படுவது தேசிய வாதமாகும். ( ) |

(20 x 2 = 40 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பிரிவு B

21. கல்விசார் நோக்கில் அரசியல் என்பதற்கு ஆழமான **இரு** கருத்துக்கள் உண்டு அவை எவை?

1) ..........

2) ..........

22. அரசியல் மற்றும் அரசியல் விஞ்ஞானம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பில் காணக்கூடிய **இரண்டு** அம்சங்களைப் பெயரிடுக.

1) ..........

2) ..........

23. அரசியல் கற்கைக்கான மெய்யியல்/இலட்சியவாத அணுகுமுறையின் முன்னோடி சிந்தனையாளர்கள் **இருவரைப்** பெயரிடுக.

1) ..........

2) ..........

24. நவீன ஆள்புல அரசுகள் நான்கு பிரதான மூலக்கூறுகளின் கீழ் ஒழுங்கமைந்துள்ளன. அவற்றில் **இரண்டினைக்** கூறுக.

1) ..........

2) ..........

25. பின்வரும் நூல்களின் ஆசிரியர்களைப் பெயரிடுக?

1) ஒப்பீட்டு அரசியலுக்கான அடிப்படை

2) அபிவிருத்தியடைந்து வரும் பிராந்தியங்களின் அரசியல்

1) ..........

2) ..........

26. அரசியல் தத்துவம் கவனம் செலுத்தும் கருப்பொருட்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1) ..........

2) ..........

27. அரசறிவியல் கோட்பாடு என்பதற்கு **இரு** விளக்கங்கள் உண்டு அவற்றைக் குறிப்பிடுக.

1) ..........

2) ..........

28. சமூகத்தில் காணப்படும் நிறுவனங்களை வகைப்படுத்தி ஒவ்வொரு உதாரணம் எழுதுக.

1) ..........

2) ..........

29. அரசியல் கட்சிகளின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் **இரு** காரணிகளைக் குறிப்பிடுக.

1) ..........

2) ..........

30. அரசு மனிதனால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களில் உயர்ந்தது ஆகும் என்பதற்கு இரு விளக்கங்கள் காணப்படுகின்றன. அவ் விளக்கங்களை முன்வைத்த **இரு** அறிஞர்களையும் அவர்களது நூல்களையும் குறிப்பிடுக.

1) ..........

2) ..........

(10x2 = 20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **எவையேனும் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

01. "சமூக வாழ்க்கையின் பல்வேறு பிரிவுகளில் காணப்படும் அரசியலே அரசறிவியல் கற்கையாகும்" அரசியல் கற்கையின் அரசியல் பிரிவுகளை குறிப்பிட்டு ஆராய்க?

*(20 புள்ளிகள்)*

02. i. அரசியல் கோட்பாடு என்பதை சுருக்கமாக எழுதுக. *(05 புள்ளிகள்)*

ii. அரசறிவியல் கோட்பாட்டுக்கு வழங்கப்பட்ட **இரு** விளக்கங்களையும் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

03. "அரசு சமூகத்தில் காணப்படும் அரச அதிகாரத்தின் மைய நிறுவனமாகும்" இக் கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க?

*(20 புள்ளிகள்)*

04. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

i) அரசியல் கட்சிகளின் பணிகள்
ii) அரசியல் பொருளியல் அணுகுமுறை
iii) தாராள ஜனநாயக அரசு
iv) அரசும் இறைமையும்
v) ஒப்பீட்டு அணுகுமுறை (10x2=20 புள்ளிகள்)

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!